**அ.வ.எண். 215/2023**
**வா.சா.1 : செல்லம்மாள்**
**தேதி : 20.11.2025**
**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

உங்களுக்கும் ஏமூரைச் சேர்ந்த செல்லப்பன் என்பவருக்கும் 1979 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது என்று சொன்னால் திருமணம் ஆனது வருடம் எனக்கு ஞாபகமில்லை. எங்கள் திருமணம் தாந்தோன்றிமலை பெருமாள் கோவிலில் நடைபெற்றது. திருமணத்திற்கு உங்கள் தகப்பனார் தான் திருமண செலவுகள் அனைத்தையும் செய்தார் என்று சொன்னால் சரிதான். திருமணம் செய்த போது 25 சவரன நகையும், 20000 ரூபாய் பெட்டி பணமும் உங்கள் தகப்பனார் கொடுத்தார் என்றால் இல்லை. நீங்கள் உங்கள் தகப்பனார் நகையும், பணமும் கொடுத்ததை கொடுக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கு திருமணத்தின் வாயிலாக இரண்டு பெண்குழந்தைகள் பிறந்தார்கள் என்றும் அவர்களுக்கு திருமணம் நடந்துவிட்டது என்று சொன்னால் சரிதான். உங்கள் குழந்தைகள் இருவரின் குழந்தைகளுக்கும் திருமணம் ஆகி அவரவர் கணவர் வீட்டில் இருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். என் 2 மகள்களுக்கும் 25 வயதிற்கு மேல் இருக்கும். என் 2 மகள்களுக்கும் காதுகுத்து, திரட்டி விழாக்கள் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் 2023 ல் இறந்தார். உங்கள் தகப்பனார் இருந்த போது உங்கள் மகள்களின் விழாக்களுக்கான செலவுகளை செய்தார் என்று சொன்னால் அவர் வந்தார் செலவுகள் எதுவும் செய்யவில்லை. நீங்கள் சொல்வது தவறு என்றும் உங்கள் 2 மகள்களின் காதுகுத்து, திரட்டி ஆகியவற்றிற்கான செலவுகள், சீர்கள் ஆகியவற்றை உங்கள் தந்தைதான் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. உங்களது மூத்த மகளின் திருமணம் செலவுகள் முழுவதையும்

உங்கள் தகப்பனாரும், உங்கள் சகோதரரும் தான் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தாயார் மாரயியம்மாள் 1993 ல் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். உங்கள் தாயார் இறந்தபிறகு உங்கள் தாயாரின் 6 ½ பவுன் கொடி உங்களுக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. உங்கள் சகோதரர் உங்களுக்கு 3 பவுன் நகையும், 5000 ரூபாயும் சீராக கொடுத்தார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார் என்றால் சரிதான். அதன்பிறகு அவர் கைத்தறி நெசவு வேலைக்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். உங்கள் சகோதரர் கைத்தறி நெசவிற்கு சென்ற வருமானத்தை உங்கள் தகப்பனாரிடம் கொடுத்து விடுவார் என்று சொன்னால் அவரும் கொடுத்து விடுவார் நானும் எனக்கு வரும் வருமானத்தை கொடுத்து விடுவேன். நீங்கள் ஏழூரில் உங்கள் கணவர் வீட்டில் தான் இருந்து வருகிறீர்கள் என்றால் நான் என் தகப்பனார் வீட்டுக்கும் சென்று அங்கும் பாடுபட்ட வருமானம் ஈட்டி தருவேன். உங்களுக்கு திருமணம் ஆனதிலிருந்து உங்கள் கணவர் வீட்டில் தான் இருந்து வருகிறீர்கள் என்றும் உங்கள் தகப்பனார் வீட்டிற்கு பாடுபட்டு எதுவும் தரவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா 1 வது அயிட்ட சொத்து மட்டும் தான் பூர்வீக சொத்து என்று சொன்னால் சரிதான். மற்ற சொத்துகள் அனைத்தும் 1ம் வாதி அவருடைய வருமானத்தை கொண்டு உங்கள் தகப்பனார் பெயரில் வாங்கிய சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல எங்கள் தகப்பனார் பூர்வீக சொத்தில் வந்த வருமானத்தை கொண்டு தான் தாவா 1 வது அயிட்ட சொத்துக்களை தவிர மற்ற இதர சொத்துக்களை வாங்கியுள்ளார். பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானத்தை காண்பிக்க நீங்கள் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்ற சொன்னால் சரியல்ல. பூர்வீக சொத்தில் வறட்சியாக பூமிகள் என்றும் அதில் எந்தவொரு வருமானமும் இல்லை என்றால் சரியல்ல அதில் கிணறு உள்ளது அதை வைத்து வருமானம் சம்பாதித்துள்ளார். 1993 ஆம்

ஆண்டு உங்கள் தாயார் இறந்தபிறகு உங்கள் தகப்பனார் அனைத்து சொத்துக்களையும் உங்கள் சகோதரருக்கு விற்றுவிட்டார் என்றும் அதிலிருந்த தாவா சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதியின் அனுபவித்தில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. 1993 ஆம் ஆண்டிலிருந்து தாந்தோனி விவசாய கூட்டுறவு சங்கத்திலிருந்து 1ம் பிரதிவாதிதான் விவசாய கடன் பெற்று திருப்பி செலுத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் பிரமாண வாக்குமூலத்திலேயே 1ம் பிரதிவாதி தான் நிர்வாகம் செய்து வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளீர் என்ற சொன்னால் சரியல்ல. ஏமூரில் உங்கள் தகப்பனார் 2 வீடுகள் கட்டிக்கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல அந்த 2 வீடுகளும் என் மாமனார், மாமியார் சம்பாதித்த சொத்துக்கள். உங்களுக்கு சீராக 57 ஆடுகள், 2 மாடுகளை சீராக உங்கள் தந்தை கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு நிலவரி 1ம் பிரதிவாதிதான் கட்டி வருகிறார் என்ற சொன்னால் சரியல்ல என் தகப்பனார் தான் செலுத்தி வந்தார். தாவா சொத்திற்கான அடங்கல் கணக்கு நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உங்களுக்கு எவ்வித பங்குரிமையும் ஏற்படவில்லை என்ற சொன்னால் சரியல்ல. ஆகையால் நீங்கள் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2025.11.20 18:07:31 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.